# ஆண்டறிக்கை

## 2014

*"பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் கூட்டாகத் தீர்மானம் எடுப்பதன் ஊடாக வெற்றியை நோக்கி.."*


தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு

தொ.பே. +94 11 2680711/2680712
தொலை நகல் +94 11 2680713

31/9, 31/10, டட்லி சேனாநாயக்க மாவத்தை
கொழும்பு 08.

இணையத் தளம் www.nastec.lk
மின்அஞ்சல் nastecsl@yahoo.com

# எம்மைப் பற்றி

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு 1994ம் ஆண்டின் 11ம் இலக்க தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும் என்பதோடு, 1998ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொழிற்பட ஆரம்பித்தது. இது 1998 திசெம்பர் 6 ஆம் திகதி உத்தியோகபூர்வ ரீதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1999 சனவரி மாதம் முதல் முழுமையாக இயங்குகின்ற ஒரு நிறுவனமாக மாறியது.

இலங்கை அரசாங்கத்துக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கல் மற்றும் கொள்கை வகுத்தலுக்கான உயர் நிறுவனமாக NASTEC பெயரிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களை ஆணைக்குழு உள்ளடக்கியுள்ளது.

# ஆண்டறிக்கை 2014

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுச் செயலகத்தின் வெளியீடு.

ஆக்கம்: திருமதி இரேகா நில்மினி பெரேரா
தொகுப்பு: கலாநிதி முதித லியனகெதர

- 2015 திசெம்பர் -

# உள்ளடக்கம்

எமது தொலைநோக்கு மற்றும் செயற்பணி 1

ஆணைக்குழு உறுப்பினர்கள் 2

நிறுவனத்தின் விபரத் திரட்டு 4

நிறுவனக் கட்டமைப்பு 5

எமது செயற்பாடுகள் 6

விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வு 6

இலங்கையின் விஞ்ஞான, தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய வருடாந்த தேசிய மீளாய்வு 12

ஏழாவது இலங்கை ஈராண்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாடு 13

சர்வதேச உறவுகள் 15

எமது ஏனைய செயற்பாடுகள் 17

தேசிய விஞ்ஞான வாரத்தின் செயற்பாடுகள் 22

எமது ஆளணியினர் 27

ஆளணியினர் செய்திகள் 29

ஆளணியினர் பங்கேற்ற முக்கியமான நிகழ்ச்சிகள் 30

நன்றி தெரிவித்தல் 32

நிதி அறிக்கை 34

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 36

# தொலைநோக்கு மற்றும்

## எமது தொலைநோக்கு

*“இலங்கை மக்களின் சுபீட்சம் மற்றும் சௌபாக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு தொழில்நுட்பத்தின் உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் பிரயோகம் பற்றி அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்கும் உயர் நிறுவனமாகத் திகழ்தல்”*

## எமது செயற்பணி

*“நிலைபேண்தகு அபிவிருத்தியை முன்னிட்டு பயன்படுத்துவதற்காக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆற்றல்களை கட்டியெழுப்புவதற்கான கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் திட்டங்களை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தல்”*

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்



பேராசிரியர் டீ.ஏ. தந்திரிகொட
தலைவர்
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் பௌதீகவியல் பற்றிய தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் (2004 முதல் இன்றுவரை), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் பௌதீகவியல் பேராசிரியர் (1996-2004), பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் (2012), உயர் கல்வி அமைச்சின் கொள்கை மற்றும் மூலோபாய பிரிவின் முதன்மை ஆலோசகர் (2007-2008), இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் பொதுத் தலைவர் (2011), எடின்பர்க் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி ஆராய்ச்சி கௌரவ அங்கத்தவர் (1993-1994).



பேராசிரியர் பி.ஆர்.ரீ. குமாரணதுங்க
றுகுணு பல்கலைக் கழகத்தின் கடற்றொழில் மற்றும் சமுத்திரவியல், தொழில்நுட்ப பீடத்தின், கடற்றொழில், நீரியல் வள திணைக்களத்தில் சமுத்திர உயிரியல் பற்றிய சிரேஷ்ட பேராசிரியர் (2007 முதல் இன்று வரை), கடற்றொழில் மற்றும் சமுத்திரவியல், தொழில்நுட்ப பீடத்தின் ஸ்தாபகர்/பீடாதிபதி (2005 முதல் 2008), றுகுணு பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் சமுத்திர உயிரியல் திணைக்களத்தின் தலைவர் (1990-2005)
இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தில் வகித்துள்ள பதவிகள்

- பொதுத் தலைவர் (2013),
- நிர்வாகப் பேரவை அங்கத்தவர் (2003, 2004, 2006, 2007, 2010, 2011)
- பிரிவு டீ (இயற்கை விஞ்ஞானம்) - தலைவர் (2003), பிரதித் தலைவர் (2002), செயலாளர் (2000), குழு அங்கத்தவர் (1998 முதல் 2004)
- விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் குழு – தவிசாளர் (2005), குழு அங்கத்தவர் (2003, 2008, 2011)
- விஞ்ஞானக் கல்விக் குழு - தவிசாளர் (2011)



திரு. பி.டீ. பர்னாந்து

கைத்தொழில், வாணிப அமைச்சின் வாணிப பணிப்பாளர் நாயகம் (2012-2013); இலங்கை கொன்சியுலர் நாயகம், அவுஸ்திரேலியா (2009), ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் வர்த்தக மேம்பாட்டு பணிப்பாளர் – தலைவர் (2007-2009); இலங்கை கொன்சியுலர் நாயகம், துபாய் (2004-2007); இலங்கை கொன்சியுலர் நாயகம், கராச்சி (2002-2004); வர்த்தக மற்றும் வாணிப அமைச்சின் பிரதி வாணிப பணிப்பாளர் (2001); ஐரோப்பிய சங்கத்தின் நிரந்தரப் பிரதிநிதி, புரூசெல்ஸ் (1998-2001); யப்பான் இலங்கைத் தூதரகத்தின் தன்மைச் செயலாளர் (வாணிப மற்றும் பொருளாதார) (1987-1989); பாகிஸ்தானில் இலங்கை வர்த்தக ஆணையாளர் (1982-1985); வர்த்தக, கப்பற்றுறை அமைச்சின் உதவி வாணிப பணிப்பாளர் (1979-1982); ஒருங்கிணைந்த சுங்க உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் உதவிச் செயலாளர் (1978).



பேராசிரியர் ஏ.ஏ.பீ.எஸ். மனம்பேரி

களனிய பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தின் அணு மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் (2009 முதல் இன்று வரை), டர்டன்ஸ் ஆஸ்பத்திரி அணு உயிரியலாளர், ஆலோசகர் (2007 முதல் இன்று வரை), ஆலோசக தொழில்நுட்ப மதிப்பீட்டாளர், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதரச் சபையின் மதியுரை தொழில்நுட்ப மதிப்பீட்டாளர் (2008 முதல் இன்று வரை)



கலாநிதி பி.எம்.எஸ். பட்டகொட

நிதி, திட்டமிடல் அமைச்சின், பொதுத் திறைசேரியில் பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், (2008 முதல் இன்று வரை), பொதுத் திறைசேரியில் கருத்திட்ட முகாமைத்துவ பணியகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் - பிரதம நிறைவேற்று அலுவலர், இலங்கை காபன் நிதியம் (2008 முதல் இன்று வரை), தொழிற்பாட்டு மற்றும் மீளாய்வு பணிப்பாளர் நாயகம், பொதுத் திறைசேரி (2007-2008), உலக வங்கியின் இலங்கை காபன் நிதி உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் குழுத் தலைவர் (2004-2007), சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சில் காலநிலை மாற்றம் மற்றும் உலக அலுவல்கள் பற்றிய பணிப்பாளர் (1998-2004), இலங்கையின் சனாதிபதி அவர்களின் உதவிச் செயலாளர் (1992-1994), பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு (1987-1989), பொது நிர்வாக அமைச்சில் பொது நிர்வாக உதவிப் பணிப்பாளர் (1986-1987).



கலாநிதி எஸ். நமசிவாயம்

மொரட்டுவை பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் (2010 முதல் இன்று வரை), பீடாதிபதி, இந்திய பட்டய நிதிப் பகுப்பாய்வாளர்கள் நிறுவனத்தின் எடியுகேஷன் லங்காவின் புதிய வெளிவாரி வீடாதிபதி 2008-2009), பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர், நவீன தொழில்நுட்பத்துக்கான ஆதர் சீ. கிளார்க் நிறுவகம் (2002-2007), கைத்தொழில், தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் இலெக்ரோ தொழில்நுட்பப் பிரிவின் தலைவர் (1995-2000)




கலாநிதி ஜே. வத்தவிதான

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் விலங்கியல் சிரேஷ்ட விரிவுரையாளர் (1998 முதல் இன்று வரை), தேசிய விஞ்ஞான மன்றத்தில் விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் குழுவின் தலைவர் (2010), தேசிய விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான நிலைய தொழில்நுட்பக் குழுவின் அங்கத்தவர் (2010), இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் சுற்றாடல் குழுவின் தலைவர் (2009), இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் ஞ பிரிவின் (உயிரியல் மற்றும் புவியியல்) தலைவர் (2006), தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகள் அமைச்சின் புடவைகள் உற்பத்தி வர்த்தகப் பிரிவின் சம்பளக் கட்டுப்பாட்டுச் சபை அங்கத்தவர் (2005), தேசிய கடற்றொழில் மற்றும் கப்பற்றுறை பொறியியல் நிறுவகத்தின் (சமுத்திர பல்கலைக்கழகம்) நிருவாகச் சபை அங்கத்தவர் (2004), தேசிய விஞ்ஞான மன்றத்தில் விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் குழுவின் அங்கத்தவர் (2003), தேசிய விஞ்ஞான மன்றத்தில் விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் குழுவின் தலைவர் (2002)

# நிறுவனத்தின் விபத்திரட்டு

- தலைவர் ஆணைக்குழுவுக்கு தலைமை வகிக்கின்றார்
- பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராவார்.
- கொள்கைகள், திட்ட அறிக்கைகள் மற்றும் ஏனைய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ஆவணங்களைத் தயாரிக்கின்ற ஆய்வுக் குழுக்கள் மற்றும் ஆலோசனைச் சபைகளுக்கான வசதியேற்பாடுகளையும் முகாமைத்துவத்தையும் சிரேஷ்ட விஞ்ஞானிகள் மேற்கொள்கின்றனர்.
- நிறைவேற்றுச் செயலாளர் ஆணைக்குழுவின் செயலாளராவார் என்பதோடு அலுவலக முகாமையாளராகவும் செயலாற்றுகின்றார்.
- நிதி மற்றும் நிர்வாகம் பற்றிய பிரதிப் பணிப்பாளர் சகல நிதி விடயங்களினதும் முகாமைத்துவத்தை மேற்கொள்கின்றார்.
- ஆணைக்குழுவின் தேவைப்பாட்டைப்பொறுத்து விசேட கருமங்கள் மற்றும் ஒப்படைகளுக்கான ஆலோசகர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றனர்.

# நிறுவனக் கட்டமைப்பு



# எமது செயற்பாடுகள்

## விஞ்ஞான, தொழில்நுட்ப மீளாய்வு

முதலாவதாக தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு அதன் மீளாய்வு செய்ய வேண்டிய நிறுவனங்களை இனங்காணும். மீளாய்வு செய்வதற்கு உத்தேசமாயுள்ள நிறுவனங்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள சுய மதிப்பீட்டு அறிக்கையை கோரல் மீளாய்வின் முதற் கட்டமாகும். அதன் பின்னர் மீளாய்வுக்கு உள்ளாக்கப்படுகின்ற நிறுவனத்தின் விருப்பத்துடன் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு மீளாய்வுச் சபையொன்று நியமிக்கும். நிறுவனத்தின் சுய மதிப்பீட்டு அறிக்கை தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு கிடைத்ததன் பின்னர் மீளாய்வுச் சபையின் முதலாவது கூட்டம் நடத்தப்படும். மீளாய்வுச் சபையின் முதலாவது கூட்டத்தில் மீளாய்வு நேர அட்டவணை திட்டமிடப்படும். அதன் பின்னர் அச்சபை மீளாய்வு செய்வதற்காக நிறுவனத்திற்குச் செல்லும். அங்கு தகவல்களைத் திரட்டும் பொருட்டும் நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் கூட்டங்கள் நடத்தப்படும். அச் செயற்பாட்டின்போது திரட்டப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முதலாவது வரைவு அறிக்கை தயாரிக்கப்படும். அந்த வரைவு மீளாய்வுக்கு உள்ளாக்கப்பட்ட நிறுவனத்தின் தலைவருக்கு நிறுவனத்தின் பதிலுறுப்புக்காக சமர்ப்பிக்கப்படும். நிறுவனத்தின் அபிப்பிராயங்களையும் உள்ளடக்கி தயாரிக்கப்படுகின்ற இறுதி அறிக்கை மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட நிறுவனத்திற்கும் நேர்வரிசை அமைச்சுக்கும் ஒப்படைக்கப்படும்.

## விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வு

விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களை மீளாய்வு செய்தல் 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு கடமையாகும். மீளாய்வின் நோக்கம் யாதெனில், விஞ்ஞான, தொழில்நுட்ப துறைக்கான விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்களிப்பை வலுப்படுத்துதலும் அதன் மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்காக விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகையை சாதகமான விதத்தில் மீளாய்வு செய்தலாகும்.

### கைத்தொழில், தொழில்நுட்ப நிறுவகம் (ITI) மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் (NSF)

கைத்தொழில், தொழில்நுட்ப நிறுவகம் (ITI) மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தை (NSF) மீளாய்வு செய்தல் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு அவற்றின் இறுதி அறிக்கைகள் 2014 ஆம் ஆண்டில் முறையே ஏப்பிரல் மற்றும் மே மாதங்களில் தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டது.

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு 2014 ஆம் ஆண்டில் பின்வரும் நிறுவனங்களின் மீளாய்வுகளை ஆரம்பித்துள்ளது.

### இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகம் (SLSI)

2013 ஒற்றோபர் மாதத்தில் சுய மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகத்தின் (SLSI) உடன்பாட்டுடன் பின்வரும் மீளாய்வுக் குழுக்களை நியமித்தது.

- *பேராசிரியர் ஆர்.ஏ. அத்தலகே, பிரதி உப வேந்தர் மொரட்டுவை பல்கலைக் கழகம், (மீளாய்வுச் சபை தலைவர்)*
- *திரு. ட. கோதாகொட, முன்னாள் தலைவர், இலங்கை தராதர அங்கீகார சபை*
- *திரு. எச்.எல்.ஆர். மதநாயக்க, முன்னாள் பணிப்பாளர், அளவைப் பிரிவு, தரக்கட்டளை மற்றும் சேவைகள் திணைக்களம்*

- *பேராசிரியர் ரமணீ விஜேசேகர, பேராசிரியர், இரசாயனவியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம்*

மீளாய்வுச் சபையின் திட்டத்தை தயாரிக்கும் பொருட்டு முதலாவது கூட்டம் ஏப்பிரல் 17 ஆம் திகதி நஸ்ரெக்கில் நடத்தப்பட்டதோடு, ஏப்பிரல் 30 ஆம் திகதி இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகத்தின் (SLSI) முகாமைத்துவத்துடன் நடத்திய முதலாவது கூட்டத்தில் மேற்படி திட்டம் மேலும் விருத்தி செய்யப்பட்டது. இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகத்திற்கான (SLSI) மீளாய்வுப் பயணத் தடவைகள் சிலவற்றின் பின்னர் மீளாய்வுச் சபையானது இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் சேவைகள் பற்றிய கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் இலங்கை தரக் கட்டளை நிறுவகத்தின் தரப்பினர்களுடன் கூட்டங்களை நடத்தியது. மீளாய்வு அறிக்கையின் முதலாவது வரைவு 2014 திசெம்பர் மாதத்தில் இலங்கை தரக்கட்டளைகள் நிறுவகத்திற்கு அதன் பதிலிறுப்பை பெறும் பொருட்டு ஒப்படைக்கப்பட்டது.

மீளாய்வுக் குழுவின்படி, தரக் கட்டளைகள் நிறுவகம் அதன் பணியாட்டொகுதியை தக்க வைத்திருப்பதில் பெருமளவு வெற்றிபெற்றுள்ளது. அதன் பணியாட்டொகுதியின் அறிவுத் தளம் மற்றும் அனுபவங்கள் தரக் கட்டளைகள் நிறுவகத்திற்குச் சொந்தமான பெறுமதியான ஒரு வளமாகும். எவ்வாறாயினும், அந்த நிறுவனத்தின் ஆட்சேர்ப்பில் தாமதம் உள்ளதால் பதவியணியில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த நிலைமை குறிப்பாக, தொடர்ந்து காணப்படுகின்ற கடமைகளின் அளவு அதிகரிப்பதில், அந்நிறுவனத்தின் விளைதிறன் மற்றும் வெளியீட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தரக் கட்டளைகள் நிறுவனம் நிதியங்களைப் பெறுதல் தொடர்பில் நிறுவனத்தின் தன்நிறைவான தன்மை குறிப்பிட்டத்தக்கதாகும். பிரிவுத் தலைவர்களின் தலைமையில் முறைசார்ந்த மாதாந்தக் கூட்டங்கள் அல்லது முறைசாராக் கூட்டங்கள் நடத்தப்படுவதன் மூலம் அநேகமான பிரிவுகளுக்கு மத்தியில் அலுவல்களின் இணைப்பாக்கம் திருப்திகரமாக நடைபெறுகின்றது. நிறுவனத்தின் பௌதீக வளங்கள் மற்றும் கட்டடங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் சிறந்த முறையில் பேணிவரப்படுவதோடு, கருவிகளின் தொடர் இலக்கமிடலும் முறைசார்ந்த விதத்தில் நடைபெறுகின்றது.

தரக் கட்டளைகள் நிறுவகம் அதன் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுகின்றபோது நிறுவனத்தின் பங்காளர்களிடமிருந்து போதியளவு ஆலோசனைகளைப் பெறுதல் மற்றும் தேசிய அபிவிருத்தி நோக்கங்கள்

தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றதென்பதை மீளாய்வுக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மீளாய்வு அறிக்கையின் முதலாவது வரைவு 2014 திசெம்பர் மாதத்தில் இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகத்திற்கு அதன் பதிலிறுப்பை பெறும் பொருட்டு ஒப்படைக்கப்பட்டது.

**<u>அணு சக்தி அதிகாரசபை (AEA)</u>**

அணு சக்தி அதிகாரசபை (AEA) ஆகஸ்ட் மாதத்தில் சுய மதிப்பீட்டு அறிக்கையை தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தது. தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு அணு சக்தி அதிகாரசபையை மீளாய்வு செய்வதற்காக பின்வரும் மீளாய்வுச் சபையை நியமித்தது.

- *பேராசிரியர் உபுல் சொன்னாதர, சிரேஷ்ட பேராசிரியர், பௌதீகவியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம் (மீளாய்வுச் சபையின் தலைவர்)*
- *திரு. நிஹால் குணசேகர, முன்னாள் மேலதிக பணிப்பாளர், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம், நிபுணத்துவ ஆலோசகர், ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு (UNIDO)*
- *திரு. தினேஷ் சத்ருகல்சிங்க, பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர், இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழு.*
- *பேராசிரியர் எம்.எம்.எம். நஜீம், விலங்கியல் திணைக்களம் பேராசிரியர், களனி பல்கலைக்கழகம்*
- *திரு. மெ. முத்தையா, பணிப்பாளர்/ நிபுணத்துவ ஆலோசகர் Business Insights& Solutions நிறுவனம்.*

ஆகஸ்ட் 20 ஆம் திகதி கூடிய மீளாய்வுச் சபை மீளாய்வுச் செயற்பாட்டை திட்டமிட்டது. 2014 செத்தெம்பர் 03 ஆம் திகதி இவர்கள் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி மீளாய்வை ஆரம்பிக்கும் பொருட்டு அணு சக்தி அதிகாரசபைக்கு (AEA) சென்றனர். பின்னர் மீளாய்வுச் சபை ஒற்றோபர் மற்றும் நவெம்பர் மாதங்களில் தரப்பினர்களைச் சந்தித்தனர். மீளாய்வு அறிக்கையின் முதலாவது வரைவு தொடர்பில் அணு சக்தி அதிகாரசபையின் (AEA) அபிப்பிராயத்தை பெறும் பொருட்டு 2013 நவெம்பர் 26 ஆம் திகதி அந்த அறிக்கையை மேற்படி அதிகாரசபைக்கு சமர்ப்பித்தது. மீளாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளாய்வுக் குழுவின் சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன. முழுமையான அறிக்கைக்கு, எமது வெப் தளத்திற்கு (www.nastec.lk) பிரவேசிக்கவும்.

சர்வதேச அணுசக்தி முகவராண்மைக்கும் வேறு விஞ்ஞான நிறுவனங்களுக்கும் இடையே தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கு வசதிகளை ஏற்பாடு செய்தல் தொடர்பில், அணு சக்தி அதிகாரசபை இந்த மீளாய்வுக் குழுவின் பாராட்டுதலுக்கு உள்ளாகியது. எவ்வாறாயினும், சர்வதேச அணுசக்தி முகவராண்மைக்கும் ஏற்புடைய விஞ்ஞான நிறுவனங்களுக்கும் இடையே நேரடி தொடர்பாடல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அணுசக்தி அதிகாரசபை அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக குழு கருதுகின்றது. ஆதலால், கருத்திட்டமொன்று முடிவடையும் வரை அணு சக்தி அதிகாரசபை அந்த கருத்திட்டத்தின் பங்குதாரராக இருத்தல் வேண்டுமெனவும், தகவல்களை பகிர்ந்தளிப்பதில் தலையீடு செய்தல் வேண்டும் எனவும் குழு விதந்துரைத்துள்ளது.

சேவைகளை வழங்குவதன் மூலம் பெறப்பட்ட வருமானம் பல வருடங்களாக தொடர்ந்து அதிகரித்துள்ளதென மீளாய்வுக் குழு குறிப்பிட்டுள்ளது. எவ்வாறாயினும், மீளாய்வுச் சபையின் கருத்து யாதெனில், ஆராய்ச்சிக் கலாசாரமொன்று இல்லாதுள்ளமை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதாகும். நிறுவனத்தின் உற்பத்திகளை வர்த்தகமயப்படுத்தலுக்கும் தொழில்நுட்பப் பரிமாற்றலுக்கும் தனியானதொரு பிரிவைப் பேணிவருதன் தேவை தொடர்பில் வலியுறுத்தப்பட்டது.

## <u>தேசிய ஆராய்ச்சி சபை (NRC)</u>

தேசிய ஆராய்ச்சி சபையின் (NRC) சுய மதிப்பீட்டு அறிக்கையை தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு 2014 ஆகஸ்ட் மாதத்தில் கிடைத்தது. மீளாய்வுச் சபையின் முதலாவது கூட்டம் செத்தெம்பர் 18 ஆம் திகதி தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு அலுவலகத்தில் நடத்தப்பட்டது. அச்சபை ஒற்றோபர் 17 ஆம் திகதி தேசிய ஆராய்ச்சி சபைக்கு சென்று மீளாய்வை ஆரம்பித்தது. அவர்கள் நவெம்பர் 03 ஆம் திகதி தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு வளாகத்தில் தரப்பினர்களுடன் பேச்சுவார்ததை நடத்தினர். தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு சமர்பிக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வரைவு அறிக்கை தேசிய ஆராய்ச்சி சபைக்கு அதன் பதிலிறுப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

மீளாய்வுச் சபை பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது.

- *பேராசிரியர் எம்.ஜே.எஸ். விஜேரத்ன, சிரேஷ்ட பேராசிரியர், விஞ்ஞான பீடம், களனி பல்கலைக்கழகம் (மீளாய்வுச் சபையின் தலைவர்)*

- *பேராசிரியர் கேமால் ஐ. டீன், மருத்துவ விஞ்ஞான பீட பேராசிரியர், களனி பல்கலைக் கழகம்*
- *பேராசிரியர் கமல் பீ. குணஹேரத், இரசாயனவியல் திணைக்களத் தலைவர், இயற்கை விஞ்ஞான பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.*
- *பேராசிரியர் டபிள்யு.யூ.ஜீ.டீ. தர்மரத்ன, விஞ்ஞான பீடாதிபதி, ருகுணு பல்கலைக்கழகம்.*

மீளாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளாய்வுக் குழுவின் சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன. முழுமையான அறிக்கைக்கு, எமது வெப் தளத்திற்கு (www.nastec.lk) பிரவேசிக்கவும்.

மீளாய்வின்போது கண்டறியப்படட்வாறு, தொழில்நுட்ப அபிவிருத்தி, ஆராய்ச்சி வெளியீடுகள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சமுதாயத்தினருக்கு சேவைகளை வழங்குதல் மற்றும் விஞ்ஞானிகளுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குகின்றபோது தேசிய ஆராய்ச்சிச் சபை பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளது. கைத்தொழில்களுக்கு தொழில்நுட்பத்தை ஒப்படைப்பதற்கு வசதிகள் ஏற்பாடு செய்யப்படுவது தனியார் – அரச கூட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாகவும் மற்றும் இலக்குகளை நோக்கியதான பல்-ஒழுக்க ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாகவும் ஆகும். விஞ்ஞான ரீதியிலான வெளியீடுகளுக்கு சனாதிபதி விருது வழங்கல் முறையானது உயர் தரத்திலான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு நாட்டின் விஞ்ஞான சமுதாயத்தினரை ஆர்வமூட்டுவதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது. மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்ட ஒன்பது முகாமைத்துவப் பிரிவுகளில் ஏழு மிகவும் பலம்பொருந்தியதாகுமென மீளாயவுக் குழு தீர்மானித்தது. ஏனைய இரண்டு முகாமைத்துவப் பிரிவுகளும் நடுத்தரமானவை என தீர்மானிக்கப்பட்டது. ஒரு முகாமைத்துவப் பிரிவு கூட பலவீனமானதெனத் தீர்மானிக்கப்பட வில்லை. ஆதலால், மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலகட்டத்தினுள் தேசிய ஆராய்ச்சி சபையின் முழுமொத்த செயலாற்றுகை வலுவானதாகும் என தீர்மானிக்கக்கூடியதாக உள்ளது.

தேசிய ஆராய்ச்சி சபையின் அளிப்புகள் தேசிய அபிவிருத்தி இலக்குகளுக்கு நேரடியாக ஏற்புடைய தன்மையைக் கொண்டுள்ளதோடு 2015-2020 தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முதலீட்டு வரைச்சட்டகத்தில் உள்ள நோக்கங்களுடன் ஒத்திசைவானதாக உள்ளது. மிக அதிக வளங்களை ஒதுக்குதல் மற்றும் அந்த வளங்களை உரிய காலத்தில் பெற்றுக்கொடுத்தல் மூலம் அதன் உற்பத்தித்திறனையும், தேசிய அபிவிருத்தி நோக்கங்களுக்கான அதன் பங்களிப்பையும் மேம்படுத்த முடியுமென்பது மீளாய்வுக் குழுவின் கருத்தாகும்.

## இலங்கை தராதர அங்கீகார சபை (SLAB)

2014 ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை தராதரச் சபையின் (SLAB) சுய மதிப்பீட்டு அறிக்கை மதிப்பீட்டுக்காக ஆராயப்பட்டது. இலங்கை தராதரச் சபையின் (SLAB) பற்றிய மீளாய்வை மேற்கொள்ளும் பொருட்டு தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப

ஆணைக்குழுவினால் மீளாய்வுச் சபைக்கு பின்வரும் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர்.

- *பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன, கௌரவ பேராசிரியர், பௌதீகவியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம் -(மீளாய்வுச் சபையின் தலைவர்)*
- *பேராசிரியர் ஜே.சீ.என். ராஜேந்திர, பௌதீகவியல் திணைக்கள பேராசிரியர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.*
- *பேராசிரியர் எஸ்.எஸ். கொலம்பகே, ஓய்வுபெற்ற பொருளியல் பேராசிரியர்.*
- *பேராசிரியர் லலீன் கருணாநாயக்க, பேராசிரியர், இரசாயனவியல் திணைக்களம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.*

மீளாய்வுச் சபையின் முதலாவது கூட்டம் 2014 செத்தெம்பர் 15 ஆம் திகதி நடத்தப்பட்டது. மீளாய்வுச் சபை இலங்கை தராதரச் சபையின் முகாமைத்துவத்தைச் சந்திப்பதற்காக ஒற்றோபர் 03 மற்றும் 23 ஆம் திகதிகளில் இலங்கை தராதரச் சபைக்கு சென்றது. மீளாய்வுச் சபை நவெம்பர் 13 ஆம் திகதி நஸ்ரெக்கில் இலங்கை தராதரச் சபையின் தரப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியது. மீளாய்வுச் சபையினால் தயாரிக்கப்பட்ட வரைவு மீளாய்வு அறிக்கை இலங்கை தராதரச் சபையின் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2014 திசெம்பர் 30 ஆம் திகதி மேற்படி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மீளாய்வின் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களில் சில கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளன. முழுமையான அறிக்கை நஸ்ரெக் வெப் தளத்தில் (www.nastec.lk) உள்ளது.

8 ஆண்டுகால இருப்பினுள், 2013 ஆம் ஆண்டின் இறுதியளவில், இலங்கை தராதரச் சபை 41 பரிசோதனை கூடங்கள், 4 தொடர் இலக்கமிடும் ஆய்வுகூடங்கள், 13 மருத்துவ ஆய்வுகூடங்கள், 5 அத்தாட்சிப்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் ஒரு பரிசோத்தித்தல் நிறுவனத்தையும் தராதரப்படுத்தியுள்ளது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட (2011-2013) காலத்தினுள், இலங்கை தராதர சபையினால் 17 பரிசோதனை கூடங்கள், 2 தொடர் இலக்கமிடும் ஆய்வுகூடங்கள், 9 மருத்துவ ஆய்வுகூடங்கள், 5 அத்தாட்சிப்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் ஒரு பரிசோதித்தல் நிறுவனம் சார்பில் தராதரப்படுத்தலை அளிப்பதற்கு இயலுமாயிருந்தது. அதே காலத்தினுள், இலங்கை தராதரப்படுத்தல் சபையினால் ஆசிய பசுபிக் பரிசோதனைகூடங்கள் தராதரப்படுத்தல் ஒத்துழைப்பு (Asia Pacific Laboratory Accreditation Cooperation) பரஸ்பர அங்கீகார கூட்டிணைப்பு (Mutual

Recognition Arrangement) மற்றும் பரிசோதனை, மருத்துவ பரிசோதனை மற்றும் தொடர் இலக்கமிடலுக்கான சர்வதேச பரிசோதனை கூட தராதர ஒத்துழைப்பின் கைச்சாத்திடுனர் ஒருவராக சேர்வதற்கும் இயலுமாயிருந்தது. பரிசோதனைகளை அத்தாட்சிப்படுத்தலின் அடிப்படையில் இலங்கையில் ஏற்றுமதிக்காக வழங்கப்படுகின்ற தரச் சான்றிதழ், தற்போது வேறு நாடுகளில் வழங்கப்படுகின்ற பரிசோதனை அறிக்கைகள் மற்றும் தரச் சான்றிதழ்களுக்கு சமமானதாக ஏற்றுக்கொள்ளப்படுவதால், இலங்கையின் உற்பத்திகளுக்கு சந்தையில் பிரவேசித்தல் இலகுவாக உள்ளது. இலங்கை தராதரச் சபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட தடைக் காரணிகளின் காரணமாக மேற்படி தராதரச் செயற்பாடு சில துறைகளில் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளதோடு, உரிய அதிகாரிகள் இத்தேவைப்பாட்டுக்கு தாமதிக்காது தீர்வு காணுதல் வேண்டும். தேசிய மட்டத்தில் அளவையியல் தொடர்பில் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் போதியதாயில்லாமை குறித்த பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு தடையாக உள்ளது. தராதரச் சான்றுப்படுத்தலின் பொருட்டு அரச நிறுவனங்களைப் பொறுத்தவரை ஆர்வமின்மை காட்டப்படுதலும் பிரதானமானதொரு தடையாகும். தராதரம் சுகாதார அமைச்சினால் அரச ஆஸ்பத்திரிகளில் மருத்துவ ஆய்வுகூடங்களுக்கு அமுலாக்கப்படாதிருத்தலும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

## இலங்கையின் விஞ்ஞான, தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய வருடாந்த தேசிய மீளாய்வு

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் அந்த ஆண்டினுள் இலங்கையின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அலுவல்கள் பற்றிய மீளாய்வை மேற்கொண்டு வருடாந்தம் அரசாங்கத்திற்கு அறிக்கையை பெற்றுக்கொடுக்கின்ற பணி இந்த ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் பற்றிய வருடாந்தம் மீளாய்வு செய்தலானது விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் மற்றும் கொள்கைகளை வகுப்பதற்கும் மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் 2012 ஆம் ஆண்டில் இலங்கையின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டதோடு அந்த அறிக்கை தொடர்பில் 2013 திசெம்பர் மாதத்தில் நடைபெற்ற கூட்டமொன்றின்போது விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் பிரதானிகளுடன் கலந்துரையாடப்பட்டது. இறுதி அறிக்கை 2014 ஜுலை மாதத்தில் நடைபெற்ற ஆணைக்குழுக் கூட்டத்தின்போது சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## ஏழாவது இலங்கை விஞ்ஞான, தொழில்நுட்ப மாநாடு (BICOST VII)

*"தேசத்தின் சார்பில் நாம் அனைவரும் எதிர்பார்க்கின்ற எதிர்கால நிலைபேண்தகு அபிவிருத்தி எம்மீது தானாகவே இறங்காது என்பதோடு எமக்குத் தேவையான எதிர்காலத்தை நோக்கி இலங்கையை வழிநடத்துகின்ற திடஉறுதியும் ஆற்றலும் எம்மிடையே உள்ளது" கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க.*




**விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சரும் பிரதான அலுவலர்களும் மாநாட்டின் பிரதான மேசையை அலங்கரிக்கின்றனர்.**

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக் குழுவுக்கு ஈராண்டுகளுக்கு ஒரு தடவை இலங்கை விஞ்ஞான, தொழில்நுட்ப மாநாட்டை நடத்துகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒன்றியம் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு விஞ்ஞானம், மற்றும் தொழிலுநுட்பம் பற்றிய விடயங்கள் தொடர்பில் தேசத்தின் சமூக-பொருளாதார அபிவிருத்தியை ஈடேற்றிக் கொள்வதில் அவற்றின் பிரயோகம் பற்றி விஞ்ஞானிகளின், தொழில்நுட்பவியலாளர்களின், கைத்தொழிலாளர்களின் நிர்வாகிககளின் மற்றும் வேறு தரப்பினர்களின் மதியுரையை பெற்றுக்கொள்கின்ற ஆற்றலை உருவாக்கும்.

ஏழாவது ஈராண்டு இலங்கை விஞ்ஞான, தொழில்நுட்ப மாநாடு தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சுடன் இணைந்து 2014 ஜுலை 07 ஆம் திகதி நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில், "2015-2020 க்கான தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப முதலீட்டு வரைச்சட்டகத்தை தயாரித்தல்" தொடர்பிலேயே கவனம் செலுத்தப்பட்டது. மேற்படி முதலீடு வரைச்சட்டகத்தை தயாரிப்பதில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் அவசியமாகின்ற 10 துறைகள் (அவையாவன, உணவு மற்றும் கமத்தொழில், நீர், ஆடைகள், சுற்றாடல், வளர்ச்சி பெற்று வரும் தொழில்நுட்பங்கள், வாழ்விடங்கள், கனிப்பொருட்கள், வலுசக்தி, சுகாதாரம் மற்றும் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் மற்றும் அறிவுச் சேவைகள்) இனங்காணப்பட்டதோடு, அதன் பொருட்டு 10 நிபுணத்துவக் குழுக்களின் சேவை பெறப்பட்டது. மேற்கூறிய ஒவ்வொரு கவனம் செலுத்தப்பட்ட துறை தொடர்பிலும் நாட்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முன்னுரிமைகளை ஆய்வு செய்து விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்காகவே ஒவ்வொரு முதன்மைத் துறைக்கும் ஏற்புடைய நிறுவனங்கள் மற்றும் நேர்வரிசை

அமைச்சுக்கள், கல்விமான்கள், தனியார்துறை மற்றும் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மேற்படி 10 நிபுணத்துவக் குழுக்களும் நியமிக்கப்பட்டன. மேற்படி மாநாட்டில் ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், தனியார்துறை தரப்பினர்கள் மற்றும் அரச அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதிகள் போன்ற 340 அதிதிகள் பங்குபற்றினர்.

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தம்மிக்க தந்திரிகொட அதிதிகளை அன்புடன் வரவேற்றார் என்பதோடு தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திருமதி தாரா விஜயதிலக்க சபைக்கு உரை நிகழ்த்மதினார். அதன் பின்னர் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்கள் பிரதான உரை நிகழ்த்தினார்.

தொழில்நுட்ப அமர்வுகள் இரண்டினுள் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் வரைவு செயப்பட்ட தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வரைச்சட்டகத்தை நிறைவேற்றுதல் தொடர்பில் கலந்துரையாடியது.
மேற்படி வரைவு தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு கையளிக்கப்பட்டது.



மாநாட்டில் பங்குபற்றியவர்களில் ஒரு பகுதியினர்




தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சருக்கு அறிக்கையை கையளித்தல்

# சர்வதேச உறவுகள்

**நாம் விஞ்ஞான, தொழில்நுட்ப நிலையம்**

## அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துக்கான நிலையம் (NAM S&T CENTRE)

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துக்கான நிலையம் (NAM S&T Centre) நாடுகளுக்கு இடையிலான ஒரு அமைப்பாகும். 47 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை பிரதிநிதித்துப்படுத்தி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த அரச அமைச்சுகள்/திணைக்களங்கள் மற்றும் முகராண்மைகள் இன்று வரை அங்கத்தவர்களாக இந்நிறுலையத்தில் இணைந்துள்ளன. தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு நாம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையத்தின் (NAM S&T Centre) இலங்கையின் தேசிய மத்திய நிலையமாக உள்ளது. நாம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையத்தின் (NAM S&T Centre) அங்கத்தவர் என்ற வகையில் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் இலங்கையின் உத்தியோகத்தர்களுக்கு இலவசமாக பயிற்சி வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க இயலுமாயுள்ளது.

2014 ஆம் ஆண்டினுள் பின்வரும் இலங்கையின் விஞ்ஞானிகள்/ உத்தியோகத்தர்கள் நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட செயற்பாடுகளில் பங்கேற்றனர்.

1. திருமதி ஹிமாலி டபிள்யு.கே. ஆதாவுதகே, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி), 2014 மே மாதம் 27-30 இந்தியாவில் நடைபெற்ற “நிலைபேண்தகு அபிவிருத்திக்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மூலோபாய அறிவுகள்” பற்றிய சர்வதேச செயலமர்வில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினார்.
2. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞானிகளுக்கான ஆராய்ச்சிப் பயிற்சி உயர் புலமைப்பரிசில் 7 விஞ்ஞானிகளுக்கு வழங்கப்பட்டது. அவற்றைப் பெற்றவர்கள், எம்.டீ.ஈ.கே. குணதிலக்க (புவிச்சரிதவியல் பீடம், சப்பிரகமுவ பல்கலைக்கழகம்), கலாநிதி எஸ். அரசரத்தினம், ரீ.ஜீ.டீ. பண்டார (மருத்துவ விஞ்ஞான பீடம், ருகுணு பல்கலைக்கழகம்), திருமதி எம்.பி. தசநாயக்க, திருமதி எம்.எஸ். இத்ரூஸ் (விலங்கியல் திணைக்களம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), திருமதி எம்.பீ.டீ. நதீரா (இயற்கை வளங்கள், முகாமைத்துவ நிலையம்) மற்றும் திருமதி லக்ஷ்மீ கமலரூபன் ஆகியோராவர். இவர்களுக்கு ஆறு மாத கால பயிற்சி உயர் புலமைப்பரிசில் கிடைக்கும்.
3. திரு. சஜ்ஜன த சில்வா (புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் பிரதிப் பணிப்பாளர் - சுரங்க அகழ்வு) 2014 செத்தெம்பர் 11-14 திகதிகளில் சிப்பாப்வே நாட்டின் ஹராரே நகரத்தில் நடத்தப்பட்ட “கனிப்பொருள் பதனிடல் மற்றும் விருத்தி” பற்றிய 3 வது சர்வதேச செயலமர்வுக்கு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றினார்.

4. திரு. குணரத்னம் ஜெயரூபன் (புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் சுரங்க அகழ்வுப் பொறியியலாளர்) மற்றும் கலாநிதி என்.டீ. சுபசிங்க (அடிப்படைக் கற்கை நிறுவகத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி கௌரவ அங்கத்தவர்) தென் ஆபிரிக்காவின் விஞ்ஞான, தொழில்நுட்ப திணைக்களத்தால் வழங்கப்பட்ட கனிப்பொருள் பதனிடல் மற்றும் விருத்தி பற்றிய பயிற்சி உயர் புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.
5. கலாநிதி என்.டீ. சுபசிங்க (அடிப்படைக் கற்கை நிறுவகத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி கௌரவ அங்கத்தவர்) 2014 நவெம்பர் 28-திசெம்பர் 01 திகதிகளில் ஈரானில் நடைபெற்ற "அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துக்கான கொள்கை வகுத்தல்" பற்றிய சர்வதேச மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

# எமது ஏனைய செயற்பாடுகள்

## இளம் விஞ்ஞானிகள் ஒன்றியத்தின் (YSF) செயற்பாடுகள்

இளம் விஞ்ஞானிகள் ஒன்றியம் (YSF) தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் மிகப் பெரும் மதியுரை ஒன்றியமாகும். அதன் தற்போதைய அங்கத்துவம் 600 ஐ தாண்டியுள்ளதோடு, அந்த அங்கத்துவமானது பிரதானமாக இந்நாட்டின் அரச துறையின், பல்கலைக் கழகங்களின், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களின் இளம் விஞ்ஞானிகளை உள்ளடக்கியதாயுள்ளது.

### இளம் விஞ்ஞானிகள் ஒன்றியத்தின் மூன்றாவது ஆராய்ச்சி மாநாடு

இளம் விஞ்ஞானிகள் ஒன்றியம் தேசிய, விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுடன் இணைந்து 2014 பெருவரி 07 ஆம் திகதி அதன் வருடாந்த பொதுக் கூட்டத்துடன் 3வது இளம் விஞ்ஞானிகள் ஒன்றிய ஆராய்ச்சி மாநாட்டை வெற்றுகரமாக ஒழுங்கு செய்தது. இந்த சந்தர்ப்பம் பல்வேறு பின்னணிகளைக் கொண்ட இளம் விஞ்ஞானிகளை ஒன்றாகச் சந்திக்க செய்தததோடு, அவர்களுக்கு தொனிப்பொருள் சார்ந்த விசேட சமர்ப்பணங்களை செய்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இளம் விஞ்ஞானிகளின் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் அமர்வு அறிக்கைகளாக வெளியிடப்படும். 73 ஆராய்ச்சி ஆய்வுக் கட்டளைகளில் 39 வாய்மூல சமர்ப்பணவுக்காகவும், 16 சுவரொட்டிச் சமர்ப்பணவுக்காகவும் தெரிவு செய்யப்பட்டது.

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவால் பெயரிடப்பட்ட மதிப்பீட்டுச் சபையொன்றின் மூலம் இளம் விஞ்ஞானிகளின் வாய்மூல சமர்ப்பணங்கள் மதிப்பிடப்பட்டதோடு, உயர் சராசரி புள்ளிகளைப் பெற்ற மூன்று பேருக்கு திறமைச் சான்றிதழ் வழங்கப்பட்டது. மூன்றாவது ஆராய்ச்சி மாநாட்டில் பின்வரும் இளம் விஞ்ஞானிகளுக்கு திறமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

| | |
|---|---|
| **01 துறை: விவசாய விஞ்ஞானம்**<br><br>ரீ.என். பர்னாந்து<br>என்.கே.கே. பிரிந்தா<br>ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்தன | **02 துறை: உயிர் இரசாயனவியல் மற்றும் சுகாதாரவியல்**<br>கே.டீ. தெகம்பட<br>எஸ்.பி.ஏ.எஸ். சேனாதீர<br>எம்.எப்.எப். நுஷா |
| **03 துறை: உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் அணு உயிரியல்**<br><br>எச்.டபிள்யு.கே.எஸ்.எல்.குமார<br>பி.பீ. ரத்னவீர | **04 துறை: பொறியியல், பௌதீகவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம்**<br>எஸ். அரூரன்<br>எம்.ஏ.யு. பெரேரா |

| | |
|---|---|
| எஸ்.எம்.யு.பி. மாவலகெதர | எச்.எஸ். பெரேரா |
| **05 துறை: சூழலியல்** | **06 துறை: சமூகவியல்:** |
| ஐ.கே. ஹேரத் | டீ.ஏ.எம். பெரேரா |
| சீ.ஏ.டீ. நாஹல்லகே | டீ.ஆர். ஏக்கநாயக்க |
| எம்.ரீ. ஜயசூரிய | ஜீ.எம். ரணதுங்க |
| **சுவரொட்டி அமர்வு** | |
| கே.கே.டீ. குமாரி | எச்.எம்.கே. அகலங்க |
| பீ.என். தொரகும்புர | எப்.எம்.எம்.ரீ. மரிக்கார் |
| என். பரனமான்ன | கே. பிரசான்னாத் |

## இளம் விஞ்ஞானிகள் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 2013

இளம் விஞ்ஞானிகள் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 2014 பெப்ருவரி 07 ஆம் திகதி ஹெக்றர் கொப்பேகடுவ கடத்தொழில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (HARTI) மகிந்த சில்வா கேட்போர் கூடத்தில் மூன்றாவது இளம் விஞ்ஞானிகள் ஒன்றியத்தின் ஆராய்ச்சி மாநாட்டுடன் சேர்ந்து நடத்தப்பட்டது. இதில் 2014 ஆம் ஆண்டுக்கான இளம் விஞ்ஞானிகள் ஒன்றியத்தின் முன்னோடிக் குழுவுக்கு பின்வரும் அங்கத்தவர்கள் தெரிவு செய்து நியமிக்கப்பட்டனர்.

- கலாநிதி புத்திகா அருக்கொட, சிரேஷ்ட விரிவுரையாளர், விவசாய மற்றும் பெருந்தோட்டப் பொறியியல் திணைக்களம், பொறியியல் தொழில்நுட்ப பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- திருமதி ரோஹிணீ அதீன்தன், சிரேஷ்ட விரிவுரையாளர், உயிர் இரசாயனவியல் திணைக்களம், மருத்துவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- கலாநிதி சலிந்த பௌரகம, சிரேஷ்ட விரிவுரையாளர், பயிரியல் திணைக்களம், விவசாய பீடம், பேராதனை பல்கலைக்கழகம்
- செல்வி நிசன்சலா போபகே, இரசாயனவியல் திணைக்களம், இயற்கை விஞ்ஞான பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- கலாநிதி நிலந்தி தஹநாயக்க, விவசாய உயிரியல் திணைக்களம், விவசாய பீடம், ருகுணு பல்கலைக்கழகம்
- கலாநிதி சுதர்ஷனீ கீகியனகே, சிரேஷ்ட விரிவுரையாளர், விவசாய உயிரியல் திணைக்களம், விவசாய பீடம், ருகுணு பல்கலைக்கழகம்
- கலாநிதி இந்திகா ஹேரத், மண் மற்றும் தாவர போசனைப் பிரிவு, தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்
- திருமதி சமந்தா இத்தமல்தெனிய, விலங்கு மருத்துவ ஆராய்ச்சி உத்தியோகத்தர், ஒட்டுண்ணிகள் பிரிவு, விலங்கு மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம்

- திரு. கயந்த கொடிகார, விரிவுரையாளர், சமுத்திரவியல் மற்றும் சமுத்திர புவிச்சரிதவியல் திணைக்களம், கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடம், றுகுணு பல்கலைக்கழகம்
- திருமதி ரி.யு. ஷியாமலீ, உயிர் புள்ளிவிபரவியல் மற்றும் பயிரியல் அலகு, கால்நடை வளர்ப்பு, கடற்றொழில் மற்றும் போசனை பீடம், இலங்கை வடமேல் பல்கலைக்கழகம்
- கலாநிதி எல்.டீ.பீ. சூரியகொட, விரிவுரையாளர், பயிரியல் திணைக்களம், விவசாய பீடம், பேராதனை பல்கலைக்கழகம்
- திரு. அஷ்வின் விக்கிரமசூரிய, சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியல் திணைக்களம், கலைப் பீடம், பேராதனை பல்கலைக்கழகம்
- கலாநிதி ஆர்.எம். நிலந்தி விஜேவர்தன சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், பின்-அறுவடை தொழில்நுட்ப நிறுவகம்

## விஞ்ஞானிகளுக்கான செயற்பாடுகள் தினம்

இளம் விஞ்ஞானிகள் ஒன்றியம் விஞ்ஞானிகளுக்கான செயற்பாடுகள் தினமொன்றை ஒழுங்கு செய்த்ததோடு, இது திசெம்பர் 20 ஆம் திகதி தேசிய விஞ்ஞான மன்றத்தில் நடத்தப்பட்டது. பிரதான உரை பேராதனை பல்கலைக் கழகத்தின் சிவில் பொறியியல் திணைக்களத்தின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் திசாநாயக்கவினால் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி செயலமர்வில் கலந்துரையாடப்பட்ட தலைப்புகள் மற்றும் சமர்ப்பித்தவர்களின் பெயர்கள் பின்வருமாறு.

- உங்களது மொழித் திறன்களை விருத்தி செய்துகொள்க (கலாநிதி விந்தியா பஸ்நாயக்க, பிரதிப் பணிப்பாளர், தாவர வைரசு சூசிகைப் பிரிவு, கமத்தொழில் திணைக்களம்)
- நீங்கள் விஞ்ஞானத்தில் குழுப் பணிகளில் திறமைசாளியா? (திருமதி பவித்ரா விக்கிரமசூரிய, சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்)
- தொழில்வான்மை (திருமதி சுனேத்ரா நுகவெல, பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், இலங்கை நிர்வாக தொழில்வான்மையாளர் கல்லூரி)
- பதிய சந்ததியின் விஞ்ஞானிகளுக்கான எளிமையான நெனோ தொழில்நுட்பவியல் பிரயோகங்கள் (திரு. மஞ்சு குணவர்தன, நிபுணத்துவ ஆலோசகர்/சிரேஷ்ட விஞ்ஞானி இலங்கை நெனோ தொழில்நுட்ப நிறுவனம்)
- அதிகூடிய நிதிய வாய்ப்புகளுக்கான ஒத்துழைப்பு ஆராய்ச்சிக் கலாசாரம் (கலாநிதி சுரங்க கொடிதுவக்கு, விரிவுரையாளர், விவசாய பீடம், பேராதனை பல்கலைக்கழகம்)

- உங்களது வாய்மொழிமூலமல்லாத தொடர்பாடல் திறன்களை வளர்த்துக்கொள்க (கலாநிதி சலிந்த பெரனகம, பணிப்பாளர், ஆளணியினர் அபிவிருத்தி நிலையம், பேராதனை பல்கலைக்கழகம்)

மேலே குறிப்பிடப்பட்ட கவர்ச்சிகரமான சமர்ப்பணங்களுக்கு மேலதிகமாக இங்கு ஆரோக்கியகரமான இடைவேளையாக இசை நிகழ்ச்சியொன்றும் நடத்தப்பட்டது.

## செயலமர்வு / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

### ஆராய்ச்சிக் கட்டுரைகளை மீயாள்வு செய்தல் பற்றிய செயலமர்வு : நாம் அதனை சரியாக செய்கின்றோமா?

இளம் விஞ்ஞானிகள் ஒன்றியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட மேற்படி செயலமர்வு 2014 ஏப்பிரல் மாதம் 25 ஆம் திகதி கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் 127 இளம் விஞ்ஞானிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.
கலந்துரையாடப்பட்ட தலைப்புகள் மற்றும் சமர்ப்பித்தவர்களின் பெயர்கள் பின்வருமாறு:

- **மீளாய்வு: அது எது தொடர்பில்? (கலாநிதி சாமலீ நாஹல்லகே, மானிடவியல் மற்றும் சமூகவியல் திணைக்களம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)**
- **மீளாய்வாளரின் கடமைப் பொறுப்பு? (பேராசிரியர் சாகரிகா ஏக்கநாயக்க, மருத்துவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)**
- **மீளாய்வாளரின் ஒழுக்கவியல் ரீதியிலான பொறுப்புகள் (பேராசிரியர் நதீரா கருணாவீர, மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்)**
- **கட்டுரைத் திறனை (Plagiarism) வெளிப்படுத்துவதற்காக காணப்படுகின்ற மென்பொருள்கள் (கலாநிதி பிரசாத் ஜயவீர, பிரயோக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)**
- **ஆராய்ச்சிக் கட்டுரைகள் நிராகரிக்கப்படுவது ஏன்? (கலாநிதி மெத்திகா விதானகே, தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்)**
- **நடைமுறை மீளாய்வு (கலாநிதி சலிந்த பெனரகம, பணிப்பாளர், ஆளணி அபிவிருத்தி நிலையம், பேராதனை பல்கலைக்கழகம்)**

**<u>பிரிசீலனை வடிவமைப்புத் திட்டமிடல் பற்றிய செயலமர்வு</u>**

இளம் விஞ்ஞானிகள் ஒன்றியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட மேற்படி செயலமர்வு பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் 2014 செப்தெம்பர் 11 ஆம் திகதி நடைபெற்றது. 115 இளம் விஞ்ஞானிகள் இச்செயலமர்வில் பங்கேற்றனர்.

மேற்படி செயலமர்வில் பின்வரும் சமர்ப்பணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- **ஆராய்ச்சிப் புள்ளிவிபரவியல் (பேராசிரியர் ஆர். ஓ. தற்றில், கௌரவ பேராசிரியர்)**
- **புள்ளிவிபரவியல் அளிமுகம் (பேராசிரியர் எஸ். சமிதா, பணிப்பாளர், விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவனம்)**
- **தாராள பரிசோதனைத் திட்டமிடல் (கலாநிதி பீ.எம்.எல்.டீ.பீ. சூரியகொட, விவசாய பீடம், பேராதனை பல்கலைக்கழகம்)**
- **தரவுப் பகுப்பாய்வின்போது நடைபெறுகின்ற தாராளமான குறைகள் மற்றும் தவறுகள் (திருமதி ரீ.யூ.எஸ். பீரிஸ், கடற்றொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு போசனை பீடம், இலங்கை வடமேல் பல்கலைக்கழகம்)**




செயலமர்வில் பங்குபற்றியோர்

## தேசிய விஞ்ஞான வாரத்தின் செயற்பாடுகள்

நவெம்பர் 10 ஆம் திகதி தேசிய விஞ்ஞான தினத்திற்கு சமாந்திரமாக, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துகின்ற மற்றும் பொது மக்களிடையே குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வூட்டும் நோக்கத்துடன் நவெம்பர் 4-10 ஆம் திகதிகளில் தேசிய விஞ்ஞான வாரமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இதற்கமைய, தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

### விண்வெளி அகழ்வு பற்றிய விசேட விரிவுரை

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு 2014 நவெம்பர் 4 ஆம் திகதி தேசிய கோள்மண்டலத்தில் நுண் கோள்களில் அகழ்வு பற்றிய விசேட விரிவுரை ஒழங்கு செய்யப்பட்டது. பாடசாலை/பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆளணியினரும் இதில் பங்குபற்றினர். பிரசித்திபெற்ற பௌதீகவியலாளரும் (வளி மண்டலம் மற்றும் மின்னல் பற்றிய) பௌதீகவியல் நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்தன ஜயரத்ன இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நெறிப்படுத்தினார்.



பார்வையாளர்களில் ஒரு பகுதியினர்

## பூங்காவியல் பற்றிய நிகழ்ச்சித்திட்டம்

இந்நிகழ்ச்சித்திட்டம் 2014 நவெம்பர் 7 ஆம் திகதி தேசிய விஞ்ஞான மன்றத்தின் கேட்போர் கூடத்தில் 80 மாணவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஆளணி அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி சலிந்த பெனரகம இதில் பிரதான வளவாளராக இருந்தார். சரியான விதத்தில் பாத்திரங்கள் மற்றும் பாத்திர ஊடகத்தை தெரிவு செய்தல், போத்தல் பூங்காவொன்றை உருவாக்குதல், இழைய நடுகை முறை மற்றும் மலர் அலங்காரம் பற்றி அவர் விளக்கமளித்தார்.



மாதிரி போத்தல் பூங்கா





கலாநிதி சலிந்த பெனரகம மற்றும் நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்களில் ஒரு பகுதியினர்

## “இடம்பெயர் உயிர்-பல்வகைமை பாதுகாப்பு மற்றும் தேசிய விலங்கின காட்சிசாலையின் கடமைப் பொறுப்பு” பற்றிய நிகழ்ச்சித்திட்டம்

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் இந்நிகழ்ச்சித்திட்டம் தேசிய விலங்கின காட்சிசாலை, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ZooNet (விலங்கியல் வலையமைப்பு) மற்றும் இளம் விலங்கியலாளர் சங்கத்துடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சித்திட்டம் 2014 நவெம்பர் 7 ஆம் திகதி தேசிய விலங்கினக் காட்சிசாலையில் நடத்தப்பட்டது. தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ பாட்டளி சம்பிக்க அவர்கள் இச்சந்தர்ப்பத்தில் விசேட விரிவுரை நடத்தினார். தேசிய விலங்கினக் காட்சிசாலையின் மேலதிக பணிப்பாளர் திருமதி தம்மிக்கா மல்சிங்க மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விலங்கியல் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜயந்த வத்தவிதானகே இந்நிகழ்ச்சித்திட்டத்தை நெறிப்படுத்தினார். இதில் 7 பாடசாலைகளைச் சேர்ந்த 197 மாணவர்கள் உட்பட 270 பேர் கலந்துகொண்டனர்.




விஞான, தொழில்நுட்ப அமைச்சர் சபையில் உரையாற்றுகிறார்



நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களில் ஒரு பகுதியினர்



கலாநிதி ஜயந்த வத்தவிதானகே மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார்

இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பின்வரும் துறைகள் உள்ளடக்கப்பட்டன:

1. பேணல் மற்றும் இனவிருத்தி
2. விலங்கினங்கள் பற்றிய விழிப்புணர்வு
3. ஆராய்ச்சி – ஓரிட இனங்களின் இனப்பெருக்கம்
4. பொழுதுபோக்குச் செயற்பாடுகள்

இந்த நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையில் இடம்பெயர் உயிர்-பல்வகைமை பாதுகாப்பு தொடர்பில் தேசிய விலங்கினக் காட்சிசாலையின் பொறுப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் பொருட்டே திட்டமிடப்பட்டது.

## விஞ்ஞான பேரணி

2014 நவெம்பர் 8 ஆம் திகதி தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்டு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ பாட்டளி சம்பிக்க ரணவக்க அவர்களினதும், விஞ்ஞானிகளினதும், அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்களினதும், முப்படை உத்தியோகத்தர்களினதும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களினதும் பங்கேற்புடன் வைபவ ரீதியாக நடத்தப்பட்ட முதலாவது “விஞ்ஞான பேரணியில்” தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு பங்குபற்றியது. மேற்படி பேரணியில் உள்நாட்டு தொழில்நுட்பம் உட்பட பல்வேறு தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்துகின்ற வாகனங்களும் நீர் ரொக்கட் கண்காட்சியும் உள்ளடங்கியிருந்தது. விஞ்ஞான பேரணி விஞ்ஞான வாரத்தின் இறுதி அம்சமாக காணப்பட்டது.




விஞ்ஞான வாரத்தின் தொனிப்பொருள் வாசகத்தை காட்சிப்படுத்தும் வகையில் பேரணியில் செல்கின்ற பங்குபற்றியோரில் ஒரு பகுதியினர்





## பொது அறிவுப்போட்டி நிகழ்ச்சி

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு, விஞ்ஞான வாரத்தை முன்னிட்டு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பொது அறிவுப்போட்டி நிகழ்ச்சியில் நவெம்பர் 5 ஆம் திகதி கலந்துகொண்டது. இது தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சுக்குரிய நிறுவனங்களுக்கு மத்தியில் நடத்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையிலான ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும். ஆராய்ச்சி உதவியாளர்களான செல்வி மஹேஷி பர்னாந்து மற்றும் திருமதி ஹிமாலி பாலசூரிய தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு சார்பில் இப்போட்டியில் பங்கேற்றனர்.

# எமது ஆளணியினர்






**தலைவர்**

**பேராசிரியர் தம்மிக்க ஏ. தந்திரிகொட,**

B.Sc. (Cey ), M.Sc., Ph.D. (Durham)

Chairman



**பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்**

**கலாநிதி முதித லியனகெதர**

B.Sc., M.Phil (Peradeniya)

Ph.D. (Seoul)



**சிரேஷ்ட விஞ்ஞானி திருமதி ஆஷா பிட்டதெனிய**

B.Sc. (Hons), M.Sc. (Peradeniya)



**சிரேஷ்ட விஞ்ஞானி**

**திரு. இந்திக்க சிறிவர்தன**

B.Sc. (Hons), MEcon. (Colombo)



**பிரதி பணிப்பாளர் – நிதி, நிர்வாகம்**

**திருமதி குமாரி பீரிஸ்**

B.Com., (J'pura), ICASL (intermediate)



**நிறைவேற்றுச் செயலாளர்**

**திரு. ருக்மன் குரே**

## உதவி ஆளணியினர்



**நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் – நிதி**
திரு. துசித ரத்நாயக்க, (M.A.A.T.)

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப/ தரவுத்தள உதவியாளர்**
திருமதி இசங்கா சமரவிக்ரம(நவெம்பர் வரை)
B.Sc. (Bangalore), MIT (Colombo)

- **ஆராய்ச்சி உதவியாளர்கள் (ஒப்பந்த அடிப்படையில்)**



செல்வி ஈ. மஹேஷி பர்னாந்து
B.Sc. (Special), J'pura



திருமதி சலனி அபேவர்தன (செத்தெம்பர் வரை)
B.Sc. (Special), J'pura



திருமதி ஹிமாலி பாலசூரிய
B.Sc. (Special), M.Sc. (Peradeniya)

- **முகாமைத்துவ உதவியாளர்கள்**



திருமதி நில்மினி பெரேரா
B.Sc. J'pura



திருமதி தக்ஷினி கருணாதிலக்க



செல்வி சயுமி விஜேசிங்க



செல்வி நிஷாந்தி மஹரகே

# ஆளணியினர் செய்திகள்

1. தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு 2014 சனவரி 1 ஆம் திகதி ஆராய்ச்சி உதவியாளராக வருகைதந்த செல்வி மஹேஷி பர்னாந்துவை அன்புடன் வரவேற்றது. செல்வி பர்னாந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பௌதீகவியல் தொடர்பில் பீ.எஸ்.சீ. விசேட பட்டத்தைப் பெற்றவராவார்.
2. ஆளணியின் அங்கத்தவர்கள் 2014 மார்ச் 31 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையிலான கலாசார விழாவில் பங்குபற்றி "ஜசயா ஹா லென்சினா கோலம" நாடகத்தை மேடையேற்றினர்.
3. தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் நலன்புரிச் சங்கம் 2014 ஏப்பிரல் 10 ஆம் திகதி தனது முதலாவது கூட்டத்தை நடத்தியது. அக் கூட்டத்தில் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டனர் என்பதோடு, யாப்பு தொடர்பாக கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்தனர்.
4. இலங்கை தரக்கட்டளைகள் நிறுவகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு இடையிலான கிரிக்கட் போட்டி சிறைச்சாலைகள் விலையாட்டு மைதானத்தில் மே மாதம் 14 ஆம் திகதி நடத்தப்பட்டதோடு, இதில் நிறுவனத்தின் ஆளணி அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.
5. எமது நிறுவனத்தின் செல்வி நிஷாந்தி மஹரகே தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட வெசாக் பக்திக் கீதம் இயற்றும் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றார்.
6. தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு 2014 ஜுன் மாதம் 3 ஆம் திகதி ஆராய்ச்சி உதவியாளராக வருகை தந்த திருமதி சலனி அபேவர்தனவை வரவேற்றது. திருமதி அபேவர்தன ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் பௌதீகவியல் தொடர்பில் பீ.எஸ்.சீ. விசேட பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் தனது கல்வி நடவடிக்கைகளை முன்னிட்டு செத்தெம்பர் மாதத்தில் ஐக்கிய இராச்சியத்துக்குச் சென்றார் என்பதோடு, அவரது எதிர்கால கல்வி நடவடிக்கைகள் வெற்றிபெறட்டுமாக என நாம் பிராத்திக்கிறோம்.
7. தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு 2014 மே மாதம் 02 ஆம் திகதி சிரேஷ்ட விஞ்ஞானியாக வருகை தந்த திரு. இந்திக்க சிறிவர்தனவை அன்புடன் வரவேற்றது. திரு. சிறிவர்தன கொழும்பு பல்கலைக்கழகத்தில் பீ.எஸ்.சீ. மற்றும் பொருளியல் தொடர்பில் எம்.எஸ்.சீ. பட்டத்தைப் பெற்றுள்ளார்.
8. பேராதனை பல்கலைக்கழகத்தில் விவசாயவியல் தொடர்பில் பீ.எஸ்.சீ. விசேட பட்டத்தைப் பெற்றவரான திருமதி ஹிமாலி பாலசூரிய 2014 ஒக்ோறாபர் 01 ஆம் திகதி ஆராய்ச்சி உதவியாளராக தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவில் இணைந்தார்.
9. செல்வி இசன்கா சமரவிக்ரம பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நியமனமொன்றை பொறுப்பேற்பதற்காக நவெம்பர் மாதத்தில் தேசிய விஞ்ஞான,

தொழில்நுட்ப ஆணைக்குழுவிலிருந்து நீங்கினார் என்பதோடு நாம் அவரது தொழில்சார் வெற்றியை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவிக்கிறோம்.





தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆளணியினர் “ஜசயா ஹா லென்சினா கோலம” நாடகத்தை மேடையேற்றல்

## ஆளணியினர் பங்குபற்றிய முக்கியமான சந்தர்ப்பங்கள்

1. தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ பாட்டளி சம்பிக்க ரணவக்க அவர்களின் கருத்துக்கமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்படி, தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு தனது ஆளணியினருக்காக வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை (Out-bound Training) ஒழுங்குசெய்தது. மேற்படி நிகழ்ச்சித்திட்டம் கர்னல் சன்ன கருணாரத்னவின் தலைமையில் பெப்ருவரி 21-23 ஆம் திகதிகளில் குக்குலேகங்க லாயா லெஷர் ஹோட்டலில் நடத்தப்பட்டது. மேற்படி பயிற்சியானது அலுவலகத்தின் மிகச் சிறந்த செயலாற்றுகைக்குத் தேவையான ஊழியர் திடஉறுதி, குழு உணர்வு மற்றும் தொடர்பாடல் திறன் விருத்திக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.
2. திருமதி குமாரி பீரிஸ் 2014 மே 22-23 ஆம் திகதிகளில் வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட “ஒழுக்க முகாமைத்துவம்” பற்றிய செயலமர்வில் கலந்துகொண்டார்.
3. திரு. துசித ரத்நாயக்க 2014 ஏப்பிரல் 3-4 ஆம் திகதிகளில் வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட “வருடாந்த தொகை மெய்உறுதி செய்தல் மற்றும் கையுதிர்த்தல் நடைமுறை” எனும் தலைப்பிலான செயலமர்வில் கலந்துகொண்டார்.
4. திருமதி ஆஷா பிட்டதெனிய 2014 திசெம்பர் 16 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட

“தொழில்வாண்மைக்கான ஒழுக்கவியல்” எனும் தலைப்பிலான செயலமர்வில் கலந்துகொண்டார்.









நிறுவனத்திற்கு வெளியிலான பயிற்சியில் சில கட்டங்கள்



# நன்றி தெரிவித்தல்

மீளாய்வுச் சபை அங்கத்தவர்கள் – இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனம்

- பேராசிரியர் ஆர். ஏ. அத்தலகே
- திரு. எச்.எல்.ஆர். மதநாயக்க
- திரு. டீ. கோதாகொட
- பேராசிரியர் ரமணீ விஜேசேகர

மீளாய்வுச் சபை அங்கத்தவர்கள் – அணுசக்தி அதிகாரசபை

- பேராசிரியர் உபுல் சொன்னாதர
- திரு. தினேஷ் சத்ருகல்சிங்கம்
- திரு. எம். முத்தையா
- திரு. நிஹால் குணசேகர
- பேராசிரியர் எம்.எம்.எம். நஜீம்

மீளாய்வுச் சபை அங்கத்தவர்கள் – இலங்கை தராதர அங்கீகாரச் சபை

- பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன
- பேராசிரியர் ஜே.சீ.என். ராஜேந்திர
- பேராசிரியர் எஸ்.எஸ். கொலம்பகே
- பேராசிரியர் லலின் கருணாநாயக்க

மீளாய்வுச் சபை அங்கத்தவர்கள் – தேசிய ஆராய்ச்சி சபை

- பேராசிரியர் எம்.ஜே.எஸ். விஜயரத்ன
- பேராசிரியர் கெமால் ஐ. டீன்
- பேராசிரியர் கமல் பீ. குணஹேரத்
- பேராசிரியர் டபுள்யு.ஜீ.டீ. தர்மரத்ன

## இயக்கக் குழு – இளம் விஞ்ஞானிகள் ஒன்றியம்

1. கலாநிதி புத்திகா அருக்கொட
2. திருமதி லோஹினீ அதிந்தன்
3. கலாநிதி சலிந்த பெளரகம
4. திருமதி நிசங்சலா போப்பகே
5. கலாநிதி நிலந்தி தஹநாயக்க

6. கலாநிதி சுதர்ஷனீ கீகியனகே
7. கலாநிதி இந்திகா ஹேரத்
8. திருமதி சமந்தா இத்தமல்தெனிய
9. திரு கயந்த கொடிகார
10. திருமதி ரீ.யூ. ஷாமலீ பீரிஸ்
11. கலாநிதி எல்.டீ.பீ. சூரியகொட
12. திரு. அஷ்வின் விக்கிரமசூரிய
13. கலாநிதி ஆர்.எம். நிலந்தி விஜேவர்தன

# நிதி அறிக்கை

**தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின்**
**2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்று**
(அனைத்து நிதிப் பெறுமதிகளும் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசு, காசுக்கு சமமானவை | 1 | 323,797 | 257,965 |
| வர்த்தகம் மற்றும் பெறுகைகள் | 2 | 13,000 | 14,000 |
| பொருட்பட்டியல்/கையிருப்பு | 3 | 70,013 | 105,889 |
| முற் கொடுப்பனவு | 4 | 710,631 | 737,824 |
| ஆளணியினர் கடன் - குறுகியகால | 5 | 174,594 | 191,061 |
| | | | 1,306,739 |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | 6 | 7,157,721 | 9,966,651 |
| மீளச் செலுத்த வேண்டிய பொறுப்புகள் | 7 | 1,355,500 | 1,355,500 |
| ஆளணியினர் கடன் - நீண்டகால | 8 | 375,420 | 350,007 |
| | | 8,888,641 | 11,672,158 |
| **மொத்த சொத்துக்கள்** | | 12,793,713 | 15,892,374 |
| **பொறுப்புகள்** | | | |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | |
| நடைமுறையல்லா பொறுப்புகள் | 9 | 727,471 | 1,248,519 |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 10 | 6,946,934 | 9,517,855 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 11 | 2,263,734 | 1,940,852 |
| | | 9,210,668 | 11,458,707 |
| **மொத்த பொறுப்புகள்** | | 9,938,139 | 12,707,226 |
| **மொத்த தேறிய பொறுப்புகள்** | | 242,537 | 271,671 |
| **தேறிய சொத்துக்கள்/ பங்குத் தொகுதிகள்** | | | |
| திரண்ட நிதியம் | | | |

| | | |
|---|---|---|
| | 2,899,822 | 3,081,960 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | 1,629,300 | 1,629,300 |
| ஒதுக்குகள் | (4,286,585) | (4,439,589) |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/ பங்குத் தொகுதிகள்** | 242,537 | 271,671 |

## தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை

## பற்றிய கூற்று

(அனைத்து நிதிப் பெறுமதிகளும் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| மீண்டுவரும் அளிப்பு | | 21,213,100 | 18,759,000 |
| மூலதன அளிப்பு – விஞ்ஞான, தொழில்நுட்ப சேவை | 12 | 4,688,500 | 1,861,731 |
| அரசாங்க அளிப்புகளின் கடன் தீர்ப்பனவு - தேய்மானம் | | 4,696,870 | 4,919,720 |
| வருமானம் | 13 | 290,613 | 132,352 |
| | | 30,889,083 | 25,672,803 |
| **செலவு** | | | |
| ஆளணியினர் வேதனங்கள் | 14 | 9,279,705 | 7,990,799 |
| பயணச் செலவுகள் | 15 | 550,541 | 377,366 |
| வழங்கல் மற்றும் நுகர்வுப்பொருள் பாவனைகள் | 16 | 410,077 | 354,585 |
| பராமரிப்பு | 17 | 753,456 | 1,072,414 |
| ஒப்பந்த சேவைகள் | 18 | 6,372,063 | 5,848,842 |
| மாற்றல்கள் | 19 | 2,972,991 | 3,014,663 |
| விஞ்ஞான, தொழில்நுட்ப சேவைகள் | 20 | 5,701,196 | 2,314,570 |
| தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்பனவுச் செலவுகள் | 6 | 4,696,870 | 4,919,720 |
| **மொத்த செலவு** | | 30,736,899 | 25,892,959 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான மிகை/(பற்றாக்குறை) | | 152,184 | (220,156) |
| **நிதிச் செலவினம்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை விற்றுப்பெற்ற வருமானம் | | 820 | 89,371 |
| குறிப்பிட்ட காலகட்டத்திற்கான தேறிய மிகை (பற்றாக்குறை) | | 153,004 | (130,785) |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

AUDITOR GENERAL'S DEPARTMENT

எனது இல. / My No. } எஸ்எஸ்/எ/என்ஏஎஸ்ரீசீ/1/14    உமது இல. / Your No. }

திகதி / Date } 2015 யூலை 14

தலைவர்,

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் அதிகாரச்சட்டத்தின் vii ஆவது பகுதியின் 10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று ஆணைக்குழுவின் தலைவருக்கு 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

AGDSL

Auditor General's Department

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

2 நிதிக்கூற்றுக்கள்

2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் புலமைப்பரிசில்களைச் செய்வதற்குரிய விஞ்ஞானிகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 695,000 தொகை தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் கணக்கிடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி முகாமைத்துவ சபை தீர்மானத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவிற்காக மதியுரையாளர் ஒருவரின் சேவை பெறப்பட்டிருந்ததுடன் 04 மாத காலத்திற்காக அதற்காக ரூபா 240,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 153,004 மிகையைக் காண்பித்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 130,785 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 283,789 தொகையான அதிகரிப்பொன்றைக் காண்பித்த போதிலும் 2.2.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்பட்டிருக்குமாயின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 541,996 பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 04 அரசாங்க நிறுவனங்களின் நடவடிக்கைகள் புலனாய்வு செய்யப்பட்டு உரிய அறிக்கையை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,656,995 தொகை செலவிடப்பட்டு புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அதன் படி இறுதி அறிக்கை அனுப்புவதற்கு ஆணைக்குழு தவறியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வரைவு அறிக்கை மாத்திரம் அனுப்பப்பட்டிருந்தது.

AGDSL
Auditor General's Department

(ஆ) ஆணைக்குழுவால் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற சகல விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களையும் மீளாய்விற்கு உட்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1.4 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்குரித்தாக எந்தவொரு நடவடிக்கையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை தொடர்பாக தற்போதைய முக்கியத்துவத்தை ஆய்வு செய்வதற்காக ரூபா 1.6 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழு நடாத்திய ஏழாவது இருசுரப்பு மாநாட்டு வேலை நடவடிக்கைகளுடன் ஆய்வு நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்காக ரூபா 34,541 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் படி செலவிடப்பட்ட கிரயம் 2.2 சதவீதமானதால் ஆணைக்குழு மிகை மதிப்பீடொன்று தயாரித்திருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஆணைக்குழுவால் ரூபா 2,995,861 செலவில் ஒழுங்கமைக்கப்பட்ட ஏழாவது இருசுரப்பு மாநாட்டின் போது 10 துறைகளுக்குரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும் ஒரு துறைக்குரிய நிகழ்ச்சித்திட்டம் மாத்திரமே செயற்பாட்டு நிலைமையில் காணப்பட்டது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

தேசிய விஞ்ஞானகூட உபகரண நிலையத்திற்கான கொள்கை தொடர்பான வரைவு அறிக்கை 2014 யூன் 30 ஆந் திகதி ஆணைக்குழுவிற்கு கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 வெளிப்படையான மோசடிகள்

---

2014 மே 02 ஆந் திகதி சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு உரித்தான விடுமுறையினை விஞ்சி வழங்கப்பட்ட 8½ நாட்கள் தனிப்பட்ட விடுமுறைகளுக்காக சம்பளமற்ற விடுமுறையாக சம்பளத்திலிருந்து கழிக்கப்படாதிருந்ததுடன் தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின் படி வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக கௌரவ பிரதமரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

6

4.4 **பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 19 ஆக இருந்ததுடன் அதில் சிரேஷ்ட 02 விஞ்ஞானிகள் பதவிகளும், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர் பதவியொன்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்றும் வெற்றிடங்களாகக் காணப்பட்டன.

(ஆ) ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்குப் புறம்பாக மீளாய்வாண்டின் போது சிரேஷ்ட விஞ்ஞானி பதவிக்காக உத்தியோகத்தரொருவர் சேர்க்கப்பட்டு ரூபா 480,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று கணக்காய்வுத் திகதி வரையிலும் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய மஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் 09 ஆவது பிரிவின் படி மீளாய்வாண்டிற்காக காலாண்டு ரீதியான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்களில் கலந்துரையாடலுக்காக சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ஆண்டின்போது கணக்காய்வு ஐயவினா எதுவும் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டில் பாதீட்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உண்மையான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பிடும் போது 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) பதவியணியினர் முகாமைத்துவம்

ஒப்பம்:- பீ.டப்ளியு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**<u>தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (இ) வாசகத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்</u>**

**<u>2.2 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துத் தெரிவித்தல்</u>**

<u>2.2.1 **கணக்கீட்டு குறைபாடுகள்**</u>

(அ) விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வு/புலனாய்வுக்காக இக் குழுக்களுக்கு 2014 ஆம் ஆண்டினுள் செலுத்த வேண்டிய ரூபா 480,000 அட்டுறுச் செலவுகளாக காட்டப்பட்டுள்ளதோடு, ஆண்டினுள் ஆரம்பிக்கப்படுகின்ற மீளாய்வு/ புலனாய்வு நடவடிக்கைகள் சில சந்தர்ப்பங்களில் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு புறம்பான காரணங்களால் அதே ஆண்டில் நிறைவு செய்ய முடியாமற்போனதன் காரணத்தினால் செலுத்த வேண்டிய அனைத்து செலவுகளையும் அட்டுறுச் செலவுகளாகக் காட்ட இயலாதுள்ளது.

**தற்போதைய நிலைமை**

**ரூபா 695,000 ஆன மேற்படி அட்டுறுச் செலவு 2015 யூலை மாதம் 30 ஆம் திகதி திருத்தப்பட்டு கணக்குகளில் இடப்பட்டுள்ளது.**

**2.2.2 சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை**

| சட்டங்கள், ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கான தொடர்பு | விளக்கமளித்தல் |
|---|---|
| (அ) 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்ப மேம்பாட்டுச் சட்டம் 5(ஆ) பிரிவு | இந்த மீளாய்வு அறிக்கையை கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டுக்காக தயாரித்தல் தாமதமாவதற்கு ஏதுவான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. |
| | I) இதற்காக காலத்தை ஈடுபடுத்தும் அளவுக்கு போதியளவு விஞ்ஞான பணியாட்டொகுதியினர் |

| | |
|---|---|
| | இல்லாதிருந்தமை |
| | II) 2013 ஏப்பிரல் மாதம் வரை ஆணைக்குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்படாதிருந்தமையால் அந்த அறிக்கையை தயாரிப்பதற்கு ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு இருந்த சிரமம் |
| | III) 2013 ஏப்பிரல் மாதத்தில் ஆணைக்குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர் 2014 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஈராண்டு விஞ்ஞான, தொழில்நுட்ப மாநாட்டுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டமை |
| | எவ்வாறாயினும் தற்போது 2013 மற்றும் 2014 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் ஒரு மீளாய்வு அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2012 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கை தற்போது உரிய அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) 2011 செத்தெம்பர் 15 ஆம் திகதிய 58 (2) ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | மேற்படி தடுத்து வைத்தல் வரித்தொகை குறைக்கப்படாமை தவறுதலாக நடைபெற்றதாகும். எதிர்வரும் காலத்தில் ஆணைக்குழு அங்கத்துவக் கொடுப்பனவு செலுத்தப்படும்போது 10% தடுத்து வைத்தல் வரியைக் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 272,000 ஆணைக்குழு கொடுப்பனவு செலுத்தல் சார்பில் ஏற்புடைய |

| | |
|---|---|
| | தடுத்துவைத்தல் வரித் தொகையை மேற்படி அங்கத்தவர்களை விழிப்புணர்வூட்டி அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| | **கவனிக்க; மேற்படி தடுத்தல் வைத்தல் வரித்தொகை மேற்படி ஆணைக்குழு அங்கத்தவர்களிடமிருந்து தற்போது அறவிடப்பட்டுள்ளது.** |
| (இ) 2006 மார்ச் 01 ஆம் திகதிய 09 ஆம் இலக்க தேசிய பெறுகைகள் தாபனச் சுற்றறிக்கையின் 2.7.7 ஆம் அத்தியாயம் | பிராந்திய பெறுகைகள் குழுவுக்கு பெறுகைகள் செயற்பாடு பற்றிய அறிவைக் கொண்ட வெளி ஆள் ஒருவர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். |

**<u>2.2.3 போதியளவு அதிகாரத் தத்துவத்தின் மூலம் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்</u>**

எமது நிறுவனத்தினால் ஆலோசகர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வேண்டப்பட்டதோடு, 2004 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாதம் 08 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈஆர்எஸ் ரீ/21-7 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அமைச்சுச் செயலாளரின் ஊடாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கடிதத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துக்கு மீணடும் மீண்டும் சமர்ப்பிக்காது எமது நிறுவனத்திற்கு ஆலோசகர்களையும் ஆராய்ச்சி உதவியாளர்களையும் ஆட்சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு அதற்கு தங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டுமென கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>4. தொழிற்பாட்டு மீளாய்வு</u>**

**<u>4.1 செயலாற்றுகை</u>**

(அ) புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட 4 நிறுவனங்களின் வரைவு அறிக்கைகள் மேற்படி நிறுவனங்களுக்கு எமது நிறுவனத்தினால் ஆற்றுப்படுத்தப்பட்டதன் பின்னர் அந்த

அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் அந்த நிறுவனங்கள் தெரிவிக்கின்ற கருத்துக்கள் உள்ளடங்கிய அறிக்கையை எமக்கு அனுப்புதல் வேண்டுமென்பதோடு இறுதி அறிக்கை அதன் பின்னரே தயாரிக்கப்படும். 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் இந்நிறுவனங்கள் அவற்றின் கருத்துக்களைத் தெரிவித்திருக்கவில்லை. ஆதலால் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கு நிறுவனத்தினால் இயலாதிருந்தது. எனினும் தற்போது 2 நிறுவனங்கள் (இலங்கை தராதர சபை (SLAB), தேசிய ஆராய்ச்சி சபை (NRC)) இறுதி அறிக்கையை தயாரித்து இந்நிறுவனத்துக்கு அனுப்பியுள்ளன. தற்போது மேலும் ஒரு நிறுவனத்தின் (இலங்கை தரக் கட்டளைகள் நிறுவனம் (SLSI)) வரைவு அறிக்கை தொடர்பில் அதன் கருத்துக்களை சமர்ப்பித்துள்ளதோடு இதற்கமைய இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். கருத்துக்களை தெரிவிப்பதற்காக நாம் வழங்கிய அறிக்கையை சமர்ப்பணம் ஒன்றின் (Power Point Presentation) மூலம் விளக்குமாறு ஏனைய நிறுவனம் (அணு சக்தி அதிகாரசபை (AEA)) வேண்டுகோள் விடுத்துள்ளதோடு நிறுவனம் அதற்காக திகதியொன்றை வழங்குமாறு தற்போது அவர்களுக்கு அறிவித்துள்ளது.

**தற்போதைய நிலைமை**

**தற்போது நான்கு நிறுவனங்களினதும், (அதாவது இலங்கை தராதர சபை (SLAB), தேசிய ஆராய்ச்சி சபை (NRC), இலங்கை தரக் கட்டளைகள் நிறுவனம் (SLSI) மற்றும் அணு சக்தி அதிகாரசபை (AEA) இறுதி அறிக்ை◌கயை தயாரித்து இந்த நிறுவனங்களுக்கு அனுப்பியுள்ளன.**

(ஆ) இலங்கையினுள் காணப்படுகின்ற ஒவ்வொரு விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனத்தையும் புலனாய்வுக்கு உள்ளாக்குதலை திட்டமிட்டவாறு மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது நிறுவனத்தில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற விஞ்ஞான பணியாட்டொகுதியின் பற்றாக்குறை மற்றும் 2014 யூலை மாத்தினுள் ஏழாவது ஈராண்டு மாநாட்டை நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தமையினால் அதற்காக அதிக கவனத்தை செலுத்துவதற்கு நேரிட்டமையின் காரணத்தினாலாகும்.

(இ) நிறுவனம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்கின்றபோது நிகழ்காலத்தில் முக்கியமாக உள்ள விஞ்ஞான, தொழில்நுட்ப

கொள்கைகள் தொடர்பிலான பிரச்சினைகளின் கற்கைக்காக மற்றும் ஏழாவது ஈராண்டு மாநாட்டுக்காக தனித்தனியாக நிதி மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னர் தீர்மானிக்கப்பட்ட ஈராண்டு மாநாட்டின் தொனிப்பொருளுக்கு விஞ்ஞான, தொழில்நுட்ப கொள்கைகள் தொடர்பில் முக்கியமாகின்ற கற்கையாக இனங்காணப்பட்ட தலைப்புகளும் பொருத்தமாயிருந்தமையால் அந்தக் கற்கைகளும் அந்த மாநாட்டின் அலுவல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. ஆதலால், அந்தக் கற்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ரூபா 1.56 மில்லியன் மீதமாகியது.

(உ) கலந்துரையாடப்பட்ட பிரதானமான 10 துறைகளுக்கு ஏற்புடையதான விஞ்ஞான, தொழில்நுட்ப முதலீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசமாயிருந்தது அப்போதைய தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் மூலமாகும். அமைச்சுகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக அதனை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் காணப்படுகின்றது. மேற்படி முதலீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசமாயிருப்பது 2015 ஆம் ஆண்டிலிருந்தாகும். தற்போது ஒரு துறையான நீரின் கீழ் சில செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(ஆ) தேசிய ஆய்வுகூட உபகரணங்கள் நிறுவனத்திற்கான கொள்கை தொடர்பிலான வரைவு அறிக்கை மேம்படுத்தப்பட்டு மீளத் தயாரிக்கப்படும் பொருட்டு ஆலோசகர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளதோடு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரான அவரது தொழில்சார் கடமைப்பளுவின் காரணமாக மேற்படி இறுதி அறிக்கையின் நடவடிக்கைகள் தாமதமாகியிருந்தன. எனினும், தற்போது இறுதி அறிக்கை நிறுவனத்துக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

## 4.3 கட்புலனாகும் முறைகேடுகள்

குறித்த உத்தியோகத்தர் ஆணைக்குழுவுக்கு தனது லீவு விண்ணப்பத்தை சமர்ப்பித்தபோது ஆணைக்குழு இதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொடுத்தது, இந்தப் பயிற்சி நிறுவனத்தின் கடமைகளுக்கு ஏற்புடைய பயிற்சியொன்றாக (கொள்கை ஆக்கம் தொடர்பில் திறன்களைக் கட்டியெழுப்பல்) காணப்பட்டமையினாலாகும். ஆதலால் அவர் பெற்றுக்கொண்டுள்ள மொத்த லீவில் 12 நாட்கள் கடமை லீவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் பெற்றுக்கொண்டுள்ள அமைய லீவுகள்

4 ½ நாட்களாகும். இதற்கமைய இவருக்குரிய லீவுகளின் எண்ணிக்கையை தாண்டி லீவு பெற்றுக்கொள்ளப்படவில்லை.

**கவனிக்க; ஆரம்ப கணக்காய்வு விசாரணைக்கு சேர்த்துக்○காள்ளப்பட்ட தாபனவிதிக் கோவையின் XV அத்தியாயத்தின் 10 வது பிரிவின் படி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்கு கௌரவ பிரதம அமைச்சரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை என்ற கூற்றுக்கான விடை கீழே தரப்பட்டுள்ளது.**

**இந்தப் பயிற்சி குறித்த உத்தியோகத்தருக்கு தனிப்பட்ட ரீதியில் கிடைத்ததொரு வாய்ப்பாகும் என்பதால் மத்திய அமைச்சின் அனுமதி மாத்திரம் பெறப்பட்டது. மேலும், அந்தப் பயிற்சி நிறுவனத்தின் கடமைகளுக்கு ஏற்புடையதொரு பயிற்சியாக காணப்பட்டமையால் அதற்கு ஆணைக்குழுவினால் இவருக்கு கடமை லீவு அங்கீகரிக்கப்பட்டது.**

**4.4 பணியாட்டொகுதி நிர்வாகம்**

(அ) சிரேஷ்ட விஞ்ஞானிகள் பதவி மூன்றுக்கும் மூன்று விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும், ஒரு விண்ணப்பதாரர் மட்டுமே கடமைக்கு வருகை தந்தார். மேலும் எஞ்சிய இரண்டு வெற்றிடங்களுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2014.06.06 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு ஒரு விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டார். ஆயினும், அந்த விண்ணப்பதாரர், பதவிக்குரிய சம்பளம் போதாமையினால் பதவியை ஏற்க மறுத்தார்.

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான தகைமைகள் 2013 நவெம்பர் 01 ஆம் திகதிய DMS/Policy/03 கடிதத்தின் மூலம் திருத்தப்பட்டுள்ளதால் அந்தப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கு முன்னர் அந்தத் திருத்தங்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும். அதற்கான அங்கீகாரத்தைக் கோரி 2015 சனவரி 02 ஆம் திகதி கடிதமொன்று மத்திய அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**கவனிக்க; மேற்படி கணக்காய்வு விசாரணை 14(2) இ வரைவு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு விடை**

**அளிக்கும்போது ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டுள்ளது.**

**<u>தற்போதைய நிலைமை</u>**

**தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான பணியாட்டொகுதி நான்கு பேரை உள்ளடக்கியுள்ளதோடு, 2011 ஆம் ஆண்டில் இருந்து நான்கு தடவைகள் பத்திரிகை அறிவித்தல்கள் வெளிியிடப்பட்டு மேற்படி மூன்று வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டளவில்கூட ஒரு வெற்றிடத்தை மட்டுமே நிரப்ப முடியுமாயிருந்தது. ஆதலால் தற்போது சிரேஷ்ட விஞ்ஞானி பதவியை கீழ்படுத்தி விஞ்ஞானி பதவி 2 க்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்து அங்கீகாரத்தைப் பெறுவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு 2015.07.16 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப/ தரவுத் தள உதவியாளர் பதவிக்கு 2015.08.24 ஆம் திகதி ஓர் உத்தியோகத்தர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்.**

(ஆ) கொள்கை ஆக்கத்தின்போது பொருளியல் பற்றிய அறிவும் மிக முக்கியமாகும். ஆதலால் ஆரம்ப விஞ்ஞானப் பட்டமொன்றும் பொருளியல் பற்றிய பட்டமும் காணப்படுதல் விஞ்ஞான, தொழில்நுட்ப கொள்கை ஆக்கத்திற்கு பொருத்தமான தகைமைகள் கலப்பாகும். பதவிக்காக தெரிவு செய்யப்பட்ட மேற்படி உத்தியோகத்தருக்கு மேற்படி தகைமை காணப்பட்டமையால் அவரை ஆட்சேர்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏற்புடைய ஒரு துறையில் பட்டப்பின் படிப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல் என்றவாறு இந்தத் தகைமை சேர்க்கப்பட்டுள்ளது.

**<u>5. கணக்கு நடவடிக்கைகளின் தன்மையும் நல்லாட்சியும்</u>**

**<u>5.1 உள்ளகக் கணக்காய்வு</u>**

(ஆ) இது தொடர்பில் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**5.2 வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு**

ஆணைக்குழுவின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு ரூபா 37 மில்லியனாக இருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் உண்மையான செலவு ரூபா 28 மில்லியனாகும் என்பதோடு ரூபா 9 மில்லியன் சேமிக்கப்படுவதற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- **சம்பளமும் படிகளும்**

  ஆட்சேர்ப்பதற்கு உத்தேசமாயிருந்த 3 புதிய பதவிகளுக்கும் பல்வேறு காரணங்களால் உரிய காலத்தில் ஆட்சேர்ப்பதற்கு இயலாதிர்நததாலும் மற்றும் 2014 ஆம் ஆண்டுக்கு பணிக்கொடை செலுத்துவதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு ஊழியரும் நீங்கிச் செல்லாததால் அந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது.

- **வெளிநாட்டுப் பயணச் செலவு**

  ஆணைக்குழுவின் நோக்கங்களுக்கு பொருத்தமான பயிற்சி/செயலமர்வுகள் கிடைக்காமையால் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டன.

- **காகிதாதிகள் மற்றும் எரிபொருள்**

  2014 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஒருசில விஞ்ஞான, தொழில்நுட்ப செயற்பாடுகளை நிறுவனத்தின் விஞ்ஞான பணியாட்டொகுதியின் பற்றாக்குறையின் காரணமாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் காகிதாதிகளைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் எரிபொருள் விலை குறைக்கப்பட்டமையால் எரிபொருளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டது.

**2014 ஆம் ஆண்டில் மூலதனச் செலவு சேமிக்கப்பட்டமைக்கான காரணங்கள்**

- ஆணைக்குழுவினால் கட்டடங்களை மேம்படுத்துகின்ற பணிகளை கட்டட உரிமையாளரைக் கொண்டே செய்துகொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டமையால் கட்டட மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது.
- 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வளிச் சீராக்கி இயந்திரங்களின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு 2014 ஆம்

ஆண்டில் வளிச் சீராக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டுக்கு ஒப்பீட்டளவில் 2014 ஆம் ஆண்டில் வளிச் சீராக்கிகளின் விலைகள் குறைந்தமையால் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ஒரு பகுதி சேமிக்கப்பட்டது.

- வருடாந்த விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வு மேற்கொள்ளப்படாமை, நிகழ்காலத்தில் முக்கியமாக உள்ள விஞ்ஞான, தொழில்நுட்ப கொள்கைகள் தொடர்பிலான பிரச்சினைகள் பற்றிய கற்கைக் குழுக்களை நியமிப்பதற்கான தேவை எழாமை (தொடர்பு;- 4.1(இ) விடை) மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய சர்வதேச செயற்பாடுகளுக்கான வாய்ப்புகள் உருவாகாமை ஆகிய காரணங்களால் மேற்படி நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது.
- 4 நிறுவனங்களை மீளாய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டதோடு, அந்த 4 நிறுவனங்களினதும் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரைவு அறிக்கைகள் அந்த நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட போதிலும் அவற்றுக்கு அந்த நிறுவனங்கள் வழங்க வேண்டிய கருத்துகள்/பதிலிறுப்புகள் உள்ளடங்கிய அறிக்கை எமக்குக் கிடைக்காமையால் இறுதி அறிக்கையை தயாரிக்க முடியவில்லை. ஆதலால், மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட சபை அங்கத்தவர்களுக்கு முதலாவது தவணைத் தொகையை மாத்திரமே செலுத்த நேரிட்டது. இதற்கமைய மீதிக் கொடுப்பனவகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது.

**கவனிக்க; மேற்படி கணக்காய்வு விசாரணை 14(2) இ வரைவு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு விடை அளிக்கும்போது ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டுள்ளது.**

## 6. முறைமை மற்றும் கட்டுப்பாடு

மேற்படி இரண்டு நிர்வாகத்துறைகள் தொடர்பிலும் விசேட கவனத்தை செலுத்துவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்கும்.

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக் குழுவின் இணைப்பாக்க தகவல்கள்

# இணைப்பாக்கத் தகவல்கள்

31/9, 31/10, டட்லி சேனாநாயக்க மாவத்தை
கொழும்பு 08.

**தொலைபேசி இல.:- +94 11 2680711/12**
**தொலைநகல் இல.:- Fax: 0112680713**
இணையத் தளம் www.nastec.lk

| பதவி | நீடிப்பு | நேரடி தொலைபேசி இல. |
|---|---|---|
| தலைவர் | 201 | 011-2680715 |
| பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் | 206 | 011-2680716 |
| சிரேஷ்ட விஞ்ஞானிகள் | 205<br>207 | 011-2680719<br>011-2680718 |
| பிரதி பணப்பாளர் (நிதி, நிர்வாகம்) | 204 | 011-2680717 |
| நிறைவேற்றுச் செயலாளர் | 220 | 011-2680714 |

